


**18. 06. 2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. பிரதமர் திரு.நரேந்திரமோடி குரேஷிய தலைநகர் ஸஹ்க்ரப்பில் அந்நாட்டு பிரதமருடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை இன்று மேற்கொள்கிறார்.

2. ஆபரேசன் சிந்தூர் துல்லிய ராணுவ நடவடிக்கையில் 3ஆவது நாட்டின் மத்தியஸ்தம் எதையும் இந்தியா ஏற்கவில்லை என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி அமெரிக்க அதிபரிடம் தெளிவு படுத்தியுள்ளார்.

3. தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 217 கோடி ரூபாய் செலவில் 26 கோவில்களின் திருப்பணிகளுக்கு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டினார்.

4. நீலகிரி மாவட்டத்தின் சுற்றுலா தளங்களை இன்றுமுதல் சுற்றுலா பயணிகள் பார்வையிட வனத்துறை அனுமதி அளித்துள்ளது.

5. சென்னையில் மாஸ்டர்ஸ் கோப்பை ஆடவர் ஹாக்கி போட்டியில் பஞ்சாப் - புதுச்சேரி அணிகள் இன்று மோதுகின்றன.

<u>இனி விரிவான செய்திகள்</u>

**********

<u>பிரதமர்</u>

பிரதமர் திரு.நரேந்திரமோடி குரேஷிய தலைநகர் ஸஹ்க்ரப்பில் அந்நாட்டு பிரதமர் ஆன்ட்ரி பிலன்கோவிச் அதிபர் ஸோரன் மிலானோவிச் ஆகியோருடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

இந்த பேச்சுவார்த்தைகளுக்கு பின்னர் இருநாடுகளுக்கிடையே அறிவியல் தொழில்நுட்பம், வேளாண்மை, கல்வி, கலாச்சார பிரிவுகளில் முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாக உள்ளன.

**********

vikram misri

<u>விக்ரம் மிஸ்ரி</u>

ஆபரேசன் சிந்தூர் துல்லிய ராணுவ நடவடிக்கையை நிறுத்த இந்தியா - அமெரிக்கா இடையே எந்தவித பேச்சுவார்த்தைகளும் நடத்தப்படவில்லை என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி அமெரிக்க அதிபரிடம் தெளிவு படுத்தியுள்ளார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி அதிபர் டொனால்டு ட்ரம்புடன் மேற்கொண்ட 35 நிமிட தொலைபேசி உரையாடலின்போது 3ஆவது நாட்டின் மத்தியஸ்தம் எதுவும் இந்தியா ஏற்கவில்லை என்றும், எதிர்காலத்தில் ஏற்காது என்றும் தெளிவபடுத்தியதாக மத்திய வெளியுறவு செயலர் திரு.விக்ரம் மிஸ்ரி கூறியுள்ளார்.

ராணுவ நடவடிக்கையை நிறுத்துவது தொடர்பான பேச்சுவார்த்தை இந்தியா பாகிஸ்தான் இடையே முறையாக நடைபெற்றதாகவும், இஸ்லாமாபாத்தின் கோரிக்கையை ஏற்றே ராணுவ தாக்குதல் நிறுத்தப்பட்டதாகவும் பிரதமர் திரு.நரேந்திரமோடி அமெரிக்க அதிபரிடம் தொலைபேசி மூலம் தெரிவித்ததாக திரு.விக்ரம் மிஸ்ரி குறிப்பிட்டுள்ளார்.

தீவிரவாத நடவடிக்கைகளை மறைமுக தாக்குதலாக கருதாமல், போராகவே இனி இந்தியா கருதும் என்று பிரதமர் வலியுறுத்தியுள்ளதாகவும் திரு.விக்ரம் மிஸ்ரி சுட்டிக்காட்டினார்.

ஜி-7 உச்சிமாநாட்டின் ஒருபகுதியாக பிரதமர் திரு.நரேந்திரமோடியும், அமெரிக்க அதிபர் திரு.ட்ரம்ப்பும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள இருந்த நிலையில் அதிபர் ட்ரம்ப் முன்னதாகவே தமது பயணத்தை முடித்துக்கொண்டு அமெரிக்கா திரும்பியதால் பேச்சுவார்த்தை நடைபெறவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவிற்கு வருகை தருமாறு அதிபர் ட்ரம்புக்கு பிரதமர் விடுத்த அழைப்பை அவர் ஏற்றுக்கொண்டதாகவும் திரு.விக்ரம் மிஸ்ரி கூறியுள்ளார்.

**********

<u>நிர்மலா சீதாராமன்</u>

உலகளாவிய டிஜிட்டல் பணபரிவர்த்தனை வரைபடத்தில் இந்தியாவை இணைத்ததற்கான விருதுகளை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று புதுதில்லியில் வழங்குகிறார்.

சென்ற நிதியாண்டில் சிறந்த முறையில் பரிவர்த்தனை மேற்கொண்டு நாட்டை மின்னணு பாதையில் முன்னெடுத்து சென்றமைக்காக இந்த விருது வழங்கப்படுகிறது.

**********

<u>பியூஷ்கோயல்</u>

மத்திய வர்த்தக துறை அமைச்சர் திரு.பியூஷ்கோயல் இரண்டு நாள் அரசு முறை பயணமாக இன்று பிரிட்டன் புறப்பட்டார்.

இருநாடுகளுக்கிடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் முடிவுக்கு வருவதாக இருநாட்டு பிரதமர்களும் அறிவித்த நிலையில் பொருளாதார வர்த்தக நட்புறவை வலுப்படுத்துவதற்கான வாய்ப்பாக இந்த பயணம் அமைகிறது.

திரு.பியூஷ்கோயல் அந்நாட்டு வர்த்தக தொழில் அமைச்சர் திரு.ஜோனத்தான் ரெனால்ஸுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

**********

<u>பிரதாப் ராவ் ஜாதவ்</u>

யோகாவை நல வாழ்விற்கான ஒரு கருவியாக பிரதமர் திரு.நரேந்திரமோடி முன்னெடுத்து சென்றுள்ளதாக மத்திய ஆயுஷ் இணை அமைச்சர் திரு.பிரதாப் ராவ் ஜாதவ் கூறியுள்ளார்.

ஆகாஷ்வாணிக்கு அவர் அளித்த சிறப்பு பேட்டியில் கடந்த 11 ஆண்டுகளாக யோகா தொடர்பான சாதனைகளை எடுத்துரைத்த அவர் இதற்காகவே ஆயுஷ் அமைச்சகம் உருவாக்கப்பட்டதாக குறிப்பிட்டார்.

இதுதொடர்பான அமைச்சரின் நேர்முகம் ஆகாஷ்வாணியின் அனைத்து அலைவரிசைகளிலும் இன்றிரவு ஒன்பதரை மணிக்கு ஒலிபரப்பாகும்.

**********

<u>சர்வதேச யோகா தினம் ஒரு செய்தி தொகுப்பு</u>

11 ஆவது சர்வதேச யோகா தினம் வரும் 21ஆம் தேதி கொண்டாடப்பட உள்ள நிலையில் இந்தியாவின் பாரம்பரிய கலாச்சாரமான யோக கலை உலகளாவிய இயக்கமாக உருவெடுத்துள்ளது.

யோக கலை கி.மு. 500 ஆண்டுகளுக்கு முன்னர் புத்தமதம் தழைத்துவந்த காலத்தில் உருவானது என்று வல்லுநர்கள் நம்பிவந்த நிலையில் அதற்கு முன்னதாகவே சிந்து சரஸ்வதி நாகரீகத்தில் யோககலைக்கான அடையாளங்களை தொல்லியல் துறை ஆய்வறிக்கை முன்னிறுத்தியது.

காலம் செல்ல செல்ல யோக கலை ஒரு ஒழுங்குமுறை பயிற்சியாக உருவெடுத்து சர்வதேச நாடுகளுக்கும் விரிவடைந்தது.

2014ஆம் ஆண்டு ஐ.நா. சபையில் ஜூன் 21ஆம் தேதியை சர்வதேச யோகா தினமாக அறிவிக்க வேண்டும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி கேட்டுக்கொண்டதற்கு இனங்க அனைவரின் ஏகோபித்த ஆதரவுடன் இத்தினத்தை சர்வதேச யோகா தினமாக ஐ.நா பிரகடணம் செய்தது.

11ஆவது சர்வதேச யோகா தினத்திற்கு இன்னும் 3 தினங்களே எஞ்சியுள்ள நிலையில் ஒற்றுமையையும் நல வாழ்வையும் முன்னெடுத்துச்செல்லும் வகையில் சமச்சீரான ஆரோக்கியமான வாழ்விற்கு யோகா பாதை அமைத்துள்ளது.

**********

<u>முதலமைச்சர்</u>

முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் சென்னை தலைமை செயலகத்தில் 217 கோடி ரூபாய் செலவில் 26 திருக்கோவில்களின் 49 புதிய திட்ட பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டினார்.

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி அருள்மிகு பாலசுப்பிரமணியம் சுவாமி திருக்கோவிலில் 3 கோடியே 11 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அடிப்படை வசதிகளை முதலமைச்சர் காணொலி மூலம் தொடங்கிவைத்தார்.

முன்னதாக கட்டணமில்லா குடிநீர் வழங்கும் தானியங்கி இயந்திரத்தை மக்கள் பயன்பாட்டிற்காக அவர் துவக்கிவைத்தார்.

முதற்கட்டமாக சென்னையில் 50 இடங்களில் இந்த தானியங்கி இயந்திரங்கள் பயன்பாட்டிற்கு வந்தன.

**********

<u>எல்.முருகன்</u>

தியாக சீலர் கக்கனின் பிறந்த நாளை ஒட்டி மதுரை மேலூர் தும்பபட்டியில் அன்னாரது மணிமண்டபத்தில் அவரது திருவருவ சிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சங்கீதா இன்று மாலைஅணிவித்து மரியாதை செலுத்தினார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் வெளியிட்ட சமூகவலைதள பதிவில் தமது எளிமையாலும், சிறந்த நிர்வாகத்திறனாலும் தமிழக மக்களால் போற்றப்பட்டவர் கக்கன் என்று புகழாரம் சூட்டினார்.

சென்னை சத்தியமூர்த்திபவனில் அவரது திருவுருவ படத்திற்கு தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு.செல்வபெருந்தகை மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

**********

<u>அன்பில் மகேஷ்</u>

புதுக்கோட்டை மாவட்டம் குறும்பலூர் அரசு உயர்நிலைப்பள்ளியை நேரடி ஆய்வு மேற்கொள்ளுமாறு மாவட்ட கல்வி அலுவலுக்கு பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி உத்தரவிட்டுள்ளார்.

பள்ளிக்கு சுற்றுசுவர் மற்றும் ஸ்மார்ட் வகுப்பறை கோரி அப்பள்ளி மாணவி முதலமைச்சருக்கு கடிதம் எழுதியிருந்த நிலையில் இந்நடவடிக்கை.

இவ்விரு கோரிக்கைகளும் விரைவில் நிறைவேற்றப்படும் என்று அமைச்சர் தமது சமூக வலைதள பதிவில் உறுதியளித்துள்ளார்.

**********

<u>மா.சுப்பிரமணியன்</u>

தமிழ்நாட்டில் அரசு மருத்துவமனைகளில் டயாலிசிஸ் நோயாளிகளுக்கு சிறப்பு புரதசத்து உணவு வழங்கும் திட்டத்தை மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் இன்று தொடங்கிவைத்தார்.

**********

சி.வி.கணேசன்

அரியலூர் மாவட்டத்தில் மக்களுடன் முதல்வர் முகாமை 463 பயனாளிகளுக்கு 4 கோடியே 4 லட்ச ரூபாய் மதிப்பிலான நல திட்ட உதவிகளை மாநில தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.சி.வி.கணேசன் இன்று வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர் பொதுமக்கள் அளிக்கும் மனுக்களுக்கு விரைந்து தீர்வு காண அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

முன்னதாக மக்கள் அளித்த கோரிக்கை மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

**********

## நீர்நிலைகள்

மேற்கு தொடர்ச்சி மலைபகுதிகளில் பெய்து வரும் கன மழை காரணமாக இதற்குட்பட்ட நீர் நிலைகளின் நீர்வரத்து அதிகரித்து வருகிறது.

திருப்பூர் மாவட்டம் அமராவதி அணையிலிருந்து உபரிநீர் வெளியேற்றப்படுவதால் கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முல்லை பெரியாறு அணைக்கு இன்று நீர்வரத்து வினாடிக்கு 5 ஆயிரத்து 300 கன அடியாக அதிகரித்துள்ளது என்று எமது தேனி செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

மணிமுத்தாறு அணைக்கும் நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில் மணிமுத்தாறு மற்றும் அகஸ்தியர் அருவிகளில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை நீடிக்கிறது.

குற்றாலம் அருவியில் இதுவரை இருந்த தடை விலக்கிகொள்ளப்பட்டுள்ளது.

**********

## நீலகிரி

நீலகிரி மாவட்டத்தில் மழை குறைந்துள்ளதால் அனைத்து சுற்றுலா தளங்களும் சுற்றுலா பயணிகளுக்கு திறக்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**********

## கன்னியாகுமரி

கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடர் மழை காரணமாக உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**********

## ஹாக்கி

சென்னையில் நடைபெறும் மாஸ்டர்ஸ் கோப்பை ஹாக்கி ஆடவர் பிரிவில் பஞ்சாப் - புதுச்சேரியையும்

தமிழ்நாடு – கேரளத்தையும் இன்று எதிர்கொள்கின்றன.

மகளிர் பிரிவில் ஹிமாச்சல பிரதேசம் - மகராஷ்டிராவுடனும்,

கர்நாடகம் கேரளத்துடனும் மோதுகின்றன.

**********

## டென்னிஸ்

ஸ்பெயின் சர்வதேச டென்னிஸ் மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா – ஸ்பெயினின் **Maria–**வை தற்போது எதிர்கொண்டுள்ளார்.

**********